# <u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>

OS. 72/2015

நாள். 09.11.2022

வா.சா.1

1989ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44ன் ஏற்பாட்டின்படி கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் திரு.பால்ராஜ் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் உறுதி செய்யப்படுகிறது,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | முத்துராமலிங்கம் | ஜாதி | .. | |
| த.பெ | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

## <u>முதல் விசாரணை</u>

எனது தரப்பில் கூறியுள்ள முதல் விசாரணை சங்கதிகளை கூடுதல் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன்.

## <u>4 -7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அசல் பிராதில் தாவா சொத்தில் 1/12 பாகம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். என் தந்தை இறந்த பிறகு 1/9 பாகம் கோரி பிராதை திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் முதலில தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் 1/4 பாகம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தையுடன் பிறந்தவர்கள் என் அப்பாவை சேர்த்து மொத்தம் 3 பேர். அவர்கள் ஒவ்வொரு பேருக்கும் 1/3 பங்கு உண்டு என்றால் சரிதான். பிராது ஏ மற்றும் பிராது பி தபசில் சொத்துக்கள் பூர்விகம் என்றால் சரிதான். அதில் என் தந்தைக்கு 1/3 பங்கு உண்டு என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் என் உடன்பிறந்தவர்கள். எனக்கும், 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கும் என் அப்பாவின் தாவா ஏ மற்றும் பி சொத்தில் 1/3ல் பங்கு உள்ளது என்றால் அனைத்து சொத்துக்களிலும் 1/3 பாகம் உள்ளது. 4 முதல் 7 பிரதிவாதிகள் என் தந்தையுடன் பிறந்த சகோதரர் மனைவி

மற்றும் மக்கள் என்றால் சரிதான். 8 முதல் 10 பிரதிவாதிகள் எனது மற்றொரு சித்தப்பாவின் மனைவி மற்றும் மக்கள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி விதவையாகி 27 வருடம் ஆகிறது. 8ம் பிரதிவாதி விதையாகி 11 வருடம் ஆகிறது. 8ம் பிரதிவாதியின் கணவர் தாவா சொத்துக்களை பொறுத்து அ.வ.எண்.13/1999 என்ற வழக்கை சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கின் பதிவேட்டு நகல் தான் வாசாஆ17 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது அவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் நகல் என்றால் சரிதான். அது **பிவாசாஆ**1. அந்த வழக்கில் 8ம் பிரதிவாதியின் கணவருக்கு அந்த வழக்கில் உள்ள முதல் 2 சொத்துக்களில் 1/3 பாகம் உள்ளது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதே வழக்கில் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு 1/3 பங்கும் எனது அப்பாவுக்கு 1/3 பங்கும் உள்ளது என தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அந்த முதல்நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் 4 முதல் 7 பிரதிவாதிகள் இறுதிநிலை தீர்ப்பாணைக்காக ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் 40/2004 என மனு தாக்கல் செய்து அதில் 30.04.2013ல் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிப்பதற்கு முன்பு வழக்கறிஞர் ஆணையர் சொத்துக்களை பார்வையிட்டார் என்றால் அப்படி யாரும் வரவில்லை. என்னை வீட்டில் மோகன் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்பதும், வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் அவர் பார்வையிட்ட போது நான் அங்கு இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. 2010லேயே எனக்கு வழக்கை பற்றி தெரியும் என்பதும், 2015ல் தான் எனக்கு தெரியவந்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.13/1999 என்ற வழக்கில்

உள்ள சொத்துக்கள் சம்மந்தமாக தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று கேட்டால் அந்த வழக்கில் உள்ள சொத்துக்களுடன் மற்றொரு சொத்து(ஜி அட்டவணை) சேர்க்கப்பட்டுள்ளது. அ.வ.எண்.13/1999ல் 1, 2 சொத்துக்கள் தவிர மற்ற சொத்துக்கள் 4 -7 பிரதிவாதிகளின் தனிப்பட்ட சொத்து என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த தீர்ப்பு சரியல்ல. பிராது ஜி அட்டவணை சொத்திற்கான கிரைய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் வாசாஆ12 ஆவணம் தான் அந்த கிரைய ஆவணமா என்று கேட்டால் அதற்கான கிரையம் ஆவணம் அது கிடையாது. நான் சொல்லும் ஜி அட்டவணை சொத்து அ.வ.எண்.13/1999லேயே காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறுதிநிலை தீர்ப்பாணையின் படி 4 முதல் 7 பிரதிவாதிகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை சுவாதீனம் கொடுக்க தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதே போல் 8 முதல் 10 பிரதிவாதிகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை சுவாதீனம் கொடுக்க தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் தந்தை இறந்த பின்பு அந்த மனுக்களில் நான் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் ஏ அட்டவணை சொத்தில் என் தந்தை குடியிருந்து அவருக்கு பின் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் அந்த சொத்தையும் சேர்த்து தான் நான் பாகம் கேட்கிறேன் என்றால் சரிதான். பி அட்டவணை சொத்து காலிமனையாக இருந்தது என்று சொன்னால் அ.வ.எண்.13/1999 வழக்கு நடந்த காலத்தில் காலிமனையாக இருந்தது. தற்போது காலிமனையாக இல்லை. அதில் என் அப்பாவுக்கு 1/3 பங்கு உள்ளது என்று தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அந்த பங்கு தற்போது காலியாக உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் 2, 3 மற்றும் என்

தந்தை ஆகியோர் அவர்களது பாகத்தை என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மூலம் எனக்கு ஆதரவாக விடுதலை செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அது பிவாசாஆ2. அந்த ஆவணம் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. **பிவாசாஆ2** மூலம் எனக்கு கிடைத்த சொத்தை ஜோதி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது அந்த ஆவணத்தின் பதிவு நகல் என்றால் சரிதான். அது **பிவாசாஆ3**. அதைப்பற்றி வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால் இன்றைய தேதியில் பி அட்டவணை சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. ஏன் என்றால் அந்த ஆவணத்தை நான் ரத்து செய்துவிட்டேன். ரத்து செய்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. பழைய வழக்கில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட நிலையில் அதை நிறைவேற்ற முடியாத வகையில் பல பரிமாற்றங்களை நான் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பூர்விக வீட்டில் வழக்கு நிலுவையில் உள்ள போது மாடி கட்டியுள்ளேன் என்றால் சரிதான். என் தாத்தா காலத்தில் குடிசை வீடு தான் இருந்தது. அதிலிருந்து எந்த வருமானமும் வரவில்லை. காலிமனையிலிருந்து வருமானம் வந்ததா என்று எனக்கு தெரியாது. தாவா சி முதல் ஜி வரையுள்ள சொத்துக்கள் கூட்டு குடும்ப வருமானத்திலிருந்து தான் வாங்கப்பட்டது என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்துக்கள் 4 - 8 பிரதிவாதிகளின் பெயர்களில் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் பெயர் ராசிக்காக அவர்கள் பெயர்களில் வாங்கப்பட்டது. குடும்ப தொழில் செய்ததற்கு ஆதாரம எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 4ம் பிரதவாதியின் கணவர் சிவகாசியில் " டெல்டா இன்ஞ்சினீயரிங்" என்ற பெயரில் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான்.

அந்த தொழிலுக்கான உரிமம் அவர் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

*(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தப்பட்டது.)*